<u>மாவட்ட உரிமையியல் ***மற்றும்*** நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண்.541/2021</u>

**2022–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ம் நாள் வியாழன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆதிமூலம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : கண்ணுசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : கீழப்பெரம்பலூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 65/2022 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் இந்த வழக்கின் வாதி கிடையாது. வாதி கலையரசன் எனது மகனாவார். வழக்கு விபரங்களை பற்றி எனது மகன் தான் கூறினார். வழக்கில் என்ன கூறியுள்ளார். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் மூன்று பேர் ஆவார்கள். பிரதிவாதிகள் என்ன பதில் கட்சி செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் 21/12/1996 தேதியிட்ட பாகப்பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. 21/12/1996 ஆம் தேதி எங்களுக்குள் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரம் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல.

2) மேற்படி பாகப்பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்ட நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக அழைத்து விசாரித்தால் மேற்படி பத்திரத்தில் நான் கையெழுத்து செய்தேனா இல்லையா என்று தெரிய வரும் என்றால் சரிதான். எனது மகன் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆன சர்வே எண். 453/10–ல் கண்ணுசாமி மக்கள் 1. வெங்கிட்டன், 2. ஆதிமூலம், 3. சுப்ரமணி ஆகியோரது பெயர்கள் கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றால் சரிதான். நான், எனது மகனுக்கு செட்டில்மெண்டாக எழுதிக் கொடுத்த சொத்தின் விஸ்தீர்ணம் 1 3/4 சென்ட் ஆகும்.

DMunicum

3) எனது மகன் இந்நீதிமன்றத்தில் என்ன சாட்சியம் கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது மகன் தனது முதன்மை வாக்குமூலத்தோடு எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் எழுதிக் கொடுத்த பத்திரம், சில பத்திரம் மற்றும் பட்டா மற்றும் வாய்தா ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார். நானும் ஓட்டு வீடு கட்டி எவருடைய இடைஞ்சலும் இல்லாமல் குடியிருந்து வருகிறோம் என்று நான் எனது முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை.

4) எனது வழக்கிற்கு பின் எனது மகனின் கைவசமுள்ள மூன்று வாய்தா ரசீதுகளை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கின் எண். எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 4 பேர் ஆவார்கள். நான் எனக்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு, திருமணம் முடிந்து அவரவர்கள் தனித்தனியாக தனி வீடு கட்டி வாழ்ந்து வருவதாகவும், தனித்தனியாக பாகம் பிரித்து வாழ்ந்து வருவதாகவும் கூறியுள்ளேன்.

5) நாங்கள் எங்களுக்குள் சொத்தை பிரித்துக் கொள்ளவில்லை. பொது சொத்து எதுவும் கிடையாது. தாவா சொத்து நான் கிரயம் வாங்கி சொத்து. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் தனித்தனியாக பாகம் பிரித்து தனியாக குடியிருந்து வருகிறார்கள் என சொல்லியிருந்தால் அது தவறு. 1991 ஆம் ஆண்டு வெளிநாடுக்கு வேலைக்காக சென்றேன்.

6) அதற்கு முன்பு 15 வருடங்களுக்கு முன்பு சென்னையில் வேலை செய்துக் கொண்டிருந்தேன். நான் சென்னையில் வேலை செய்ததற்கோ, வெளிநாடு சென்று வேலை செய்ததற்கோ நிதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை நான் 1982 ஆம் ஆண்டு கிரயம் பெற்றேன். எனது உடன் பிறந்த தம்பி கருணாநிதி 1982 ஆம் ஆண்டு எங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. 30 ஆண்டு கழித்து தான் அவர் இங்கு வந்தார். நான் வழக்கு சொத்தை வாங்கியது யாருக்கும் தெரியாது.

7) தாவா சொத்தில் பிரதிவாதிகள் என்று தகராறு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பஞ்சாயத்தார்கள் யார் யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்று நான் எனது

Downloaded

நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன். எனது முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் பஞ்சாயத்தார்கள் ஒப்புக் கொண்ட நிலையில் பிரதிவாதிகள் அதை ஏற்காமல் வீட்டை பிரிக்க வேண்டும் என பிரச்சனை செய்தார்கள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அன்று வந்த பஞ்சாயத்தார்கள் யார் என்று எனக்கு தெரியாது.

8) பின்னர் சாட்சி தான் தான் புகார் கொடுத்ததாக மாற்றி கூறுகிறார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது மகனுக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளது. அவர் விவசாய வேலை செய்து தனது குடும்பத்தை காப்பாற்றி வருகிறார். எனது மகன் கொஞ்சம் ஒரு மாதிரியானவர் கொஞ்சம் டென்ஷன் ஆனால் சொத்தே வேண்டாம் என கூறிவிடுவார். அவருக்கு சிகிச்சை எடுத்ததற்கான எந்த ஆவணங்களும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

9) நான் கூட்டு குடும்ப வருமானத்தை வைத்து வாங்கிய சொத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக எனது மகனை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதிகளை நான் படித்து பார்க்கவில்லை. ஆவணங்கள் தாக்கல் செய்தது பற்றி எனக்கு தெரியாது.

10) தற்போது என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் கூட்டு குடும்ப சொத்தை ஏமாற்ற வேண்டும் என்ற காரணத்திற்காக ஒப்பந்தப்பத்திரத்தில் உள்ள கையெழுத்தை என்னுடையது அல்ல என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

11) நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகள் யாவும் ஒவ்வொரு அம்சத்திலும் மறுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் சொல்லப்படுவது போல் பாகப்பிரிவினை ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை என்று எனது முதன்மை வாக்குமூலத்தில் கூறவில்லை. 21/12/1996 ஆம்

DMK Murthy

தேதியிட்ட ஆதரவானது உண்மையானதாக இருக்க கண்டிப்பாக இல்லை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

12) முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தையும், பாக பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தில் உள்ள கையெழுத்தையும் ஒப்பீடு செய்ய அனுப்புவதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. பாகப்பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்திட்டதாக கூறப்படும் சாட்சிகள் உள்ளூர்க்காரர்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டு பட்டாவில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியமுள்ளது என்றாலும், எங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்று கட்சி செய்தார்கள் என்றால் அது தவறு.

13) தாவா சொத்து பிரதிவாதிகளின் பெயரில் கூட்டு பட்டாவில் இருந்து வருவதால் தான் நான் உரிமை விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு தனிப்பட்ட உரிமை ஏதும் இல்லை என்றாலும் வீட்டில் முதல் மகன் என்பதால் எனது பெயரில் வாங்கப்பட்ட சொத்தை நான் அபகரிக்க பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு தாவா சொத்தை 2010 ஆம் வருடம் தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன்.

14) எனது தம்பி கருணாநிதி 30 ஆண்டுகளாக ஊரிலேயே இல்லை என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1996 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தில் கருணாநிதியை தவிர்த்து மற்ற நபர்களின் பெயரில் தாவா சொத்தை பொறுத்து பத்திரம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கருணாநிதி எப்பொழுது இங்கு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கருணாநிதி 2018 ஆம் வருடம் இங்கு வந்து தனக்குரிய பாகம் குறித்து என்னிடமும் மற்ற பிரதிவாதிகளிடமும் கேட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

15) அப்போது கருணாநிதி கேட்டதற்கு மற்ற பிரதிவாதிகள் தாவா சொத்துக்கள் மூன்றாக பிரிக்கப்பட்டு, எனது பெயரில் பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் என்னை தான் கேட்க வேண்டுமென்று சொல்லியிருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது. கருணாநிதி என்னிடம் கேட்டதற்கு நான் தாவா சொத்தை எனது மகன் பெயருக்கு எழுதிக் கொடுத்ததாக கூறி நான் தான் தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் கருணாநிதி

Downloaded

எங்களது பெயரில் முதலில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான்.

16) அதன் பிறகு தான் எனது மகன் பெயரில் உள்ள சொத்தை வைத்து அவர் மூலம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகனே இந்த வழக்கு சொத்து பற்றி எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது வழக்கறிஞர் சொல்லிக் கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

*Sd/-*

District Munsif-cum-Judicial Magistrate,

Kunnam.

DM cum JM Kunnam